# Tele: TNPSC CURRENT AFFAIRS (தமிழ்)

தினமணி
இந்தியா@75
ஆகஸ்ட்
1947 - 2021

# தமிழகத்தின் தியாக தீபங்கள்

## 1 ஜி.சுப்பிரமணிய ஐயர்

1. தாதாபாய் நௌரோஜி பம்பாய் மாகாணத்திற்கு இருப்பதுபோல் ஜி.சுப்பிரமணிய ஐயர் சென்னை மாகாணத்துக்கு முதலாவது தேசபக்தராகிறாரென்று தமிழறிஞர் குருமலை சுந்தரம் பிள்ளை ஐயரின் வாழ்க்கை வரலாற்று நூலில் பதிவு செய்துள்ளார்.



2. ஜி.சுப்பிரமணிய ஐயர் திருவையாற்றில் 1855–ஆம் ஆண்டு ஜனவரி 19–ஆம் தேதி பிறந்தார். தத்துவப் பாடத்தில் பி.ஏ. பட்டம் பெற்ற இவர் சென்னைப் பள்ளியொன்றில் தலைமையாசிரியராகத் தனது பணியைத் தொடங்கினார்.

3. 'டிரிப்ளிகேன் லிடரரி சொஸைட்டி' என்ற சமூக அமைப்பில் சேர்ந்து படிப்படியாக தேசபக்தராகப் பரிணமித்ததோடு ஒரு ஆற்றல்மிக்க ஆளுமையாகவும் உருவெடுத்தார்.

4. 1878–இல் 'இந்து' ஆங்கில இதழைத் தொடங்கியவர் இவர்தான். இவரிடமிருந்துதான் பிறகு கைமாறியது. தமிழ் மட்டும் அறிந்தவர்களிடம் தேசபக்த உணர்ச்சியை ஏற்படுத்த 1882–இல் 'சுதேசமித்திரன்' தமிழ் இதழைத் தொடங்கினார். 1902–இல் 'யுனைடெட் இந்தியா' இதழை ஆரம்பித்தார். தொடக்க காலங்களிலேயே இத்தனை இதழ்களின் ஆசிரியராக விளங்கிய ஜி.சுப்பிரமணிய ஐயர் 'தமிழ் இதழியல் துறையின் தந்தை' என்று வரலாற்று ஆய்வாளர்களால் வரையறை செய்யப்படுகிறார்.

5. (மேற்கண்ட பத்தியின் இடையில் கையால் எழுதப்பட்ட எண்)

6. 1882–ஆம் ஆண்டு தமிழகம் முழுக்க அரசியல் பிரசாரப் பயணத்தை மேற்கொண்டார். அரசியல் பிரசாரப் பயணம், பொதுக் கூட்டம், அரசியல் உரை, கூடுகிற மக்களிடையே அரசியல் துண்டறிக்கைகள் வழங்குதல் போன்ற அரசியல் பரப்புரை வடிவங்களைத் தமிழ் மக்களிடையே அறிமுகப்படுத்தியவர் ஐயர்.

7. 1885–ஆம் ஆண்டு பம்பாயில் ஏ.ஓ.ஹ்யூம் தலைமையில் கூடிய காங்கிரஸ் அமைப்பு மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்றதோடு அம்மாநாட்டின் முதல் தீர்மானத்தை முன்மொழிந்து பேசியவரும் ஐயரே.

8. தமிழில் சுய ஆட்சி வினா–விடை, ஜப்பான் சரித்திரம், இந்தியா–அதன் அரசியலும் வருங்கால நிலையும், பாரிசால் கொடுமைகள், காங்கிரஸ் பிரசாரங்கள் போன்ற 12 அரசியல் நூல்களை எழுதி வெளியிட்டு தமிழ் மக்களிடையே சுதேசி விழிப்புணர்வை ஏற்படுத்த அரும்பாடுபட்டவர் ஐயர். ஆழமான ஆங்கில அரசியல் நூல்களையும் எழுதியுள்ளார்.

9. பாரதியை இனம்கண்டு சுதேசமித்திரன் இதழின் துணை ஆசிரியராக முதன் முதலில் பணியமர்த்தியவர் ஐயர்.

10. 1908–ஆம் ஆண்டு சுதேசமித்திரனில் வெளிவந்த ஆங்கிலேய ஆட்சிக்கெதிரான சில கட்டுரைகள், செய்திகளுக்காக ஐயர் மீது வழக்குப் போடப்பட்டு கைது செய்யப்பட்டார். சென்னையில் மூன்று வாரங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். ஐயர் கைது மாகாணத்தில் எழுச்சியை ஏற்படுத்தியது.

11. 1915–இல் காந்தியடிகள் சென்னை வந்திருந்தபோது ஜி.சுப்பிரமணிய ஐயரைச் சந்தித்து உரையாடியது ஒரு வரலாற்று நிகழ்வு. ஐயர்,
12. 1916 ஆம் ஆண்டு மறைந்தார். இதழாளர், அரசியலாளர், அமைப்
13. பாளர், சொற்பொழிவாளர், எழுத்தாளர், நூலாசிரியர் என்ற பன்முக ஆளுமைமிக்க ஜி.சுப்பிரமணிய ஐயர் இந்திய விடுதலைப் போராட்டத்தின் தமிழக முன்னோடிகளில் முதல்வர்.

–ஸ்டாலின் குணசேகரன்

தினமணி
இந்தியா@75
ஆகஸ்ட் 1947 - 2021

# தமிழகத்தின் தியாக தீபங்கள்

## 2 வ.உ.சிதம்பரம் பிள்ளை

வ.உ.சிதம்பரம் பிள்ளை அன்றைய திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் 1872–ஆம் ஆண்டு செப்டம்பர் 5–ஆம் தேதி பிறந்தார். தந்தை வழக்குரைஞர் உலகநாத பிள்ளை– தாயார் பரமாயி அம்மாள்.



தந்தை வழியில் மகன் சிதம்பரம் பிள்ளையும் வழக்குரைஞரானார். வீரபாண்டிய கட்டபொம்மனின் வீரமும், கட்டபொம்மனின் அமைச்சர் தானாதிபதிப் பிள்ளையின் தியாகமும் தெற்குச் சீமையில் மக்களால் கதை கதையாகப் பேசப்பட்டு வந்தது. இவையும், இவைபோன்ற பல வரலாற்று நிகழ்வுகளும் இளம் வ.உ.சி நெஞ்சில் விடுதலை உணர்வைக் கிளர்ந்தெழச் செய்தன.

1906–இல் சென்னைக்கு வந்த வ.உ.சி., மகாகவி பாரதியைச் சந்தித்தார். ஏற்கெனவே சுதந்திர வேட்கையுடன் விளங்கிய வ.உ.சி., ‘‘என் உள்ளத்தில் மின்மினிப் பூச்சி போல் ஒளிர்ந்துகொண்டிருந்த தேசாபிமான நெருப்பு விளக்கு போல ஒளிர்விட்டு பிரகாசித்தது’’ என்று மகாகவி பாரதியின் சந்திப்பால் ஏற்பட்ட தாக்கத்தைப் பதிவு செய்துள்ளார்.

அமைப்புகளையும், நிறுவனங்களையும் உருவாக்கி, அவற்றின் மூலம் மக்களைத் திரட்டி ஆங்கிலேயரை விரட்ட தீவிரமாகக் களமிறங்கினார் வ.உ.சி.. வெள்ளையரின் அன்னியக் கப்பல் கம்பெனிகளுக்கு எதிராக சுதேசிக் கப்பல் நிறுவனத்தை அரிதின் முயன்று 1906–ஆம் ஆண்டு உருவாக்கினார். 1906–ஆம் ஆண்டு கல்கத்தாவிலும், 1907–ஆம் ஆண்டு சூரத்திலும் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய மாநாடுகளில் தமிழகத்தின் பிரதிநிதிகளை வழிநடத்திச் சென்ற ஆளுமைகளில் ஒருவராக விளங்கினார் வ.உ.சி.

தூத்துக்குடியிலிருந்த ஆங்கிலேயரின் தொழிற்சாலையான ‘கோரல் மில்’ தொழிலாளர்களின் உரிமைகளுக்காக வ.உ.சி.யும், சுப்பிரமணிய சிவாவும் 1908–ஆம் ஆண்டு ஓங்கிக் குரல் கொடுத்தனர். ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகத் தொடர்ந்து மேற்கொண்டு வந்த வலிமைமிக்க பன்முகப் போராட்டங்களால் வ.உ.சி. கைது செய்யப்பட்டார். அவரோடு சுப்பிரமணிய சிவாவும், பத்மநாப ஐயங்காரும் கைது செய்யப்பட்டனர். வழக்கு விசாரணை என்ற நாடகத்துக்குப் பிறகு வ.உ.சி.க்கு இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. 35 வயது நிரம்பிய வ.உ.சி.க்கு மொத்தம் 40 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. மேல்முறையீட்டில் தண்டனை 6 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. சுப்பிரமணிய சிவாவுக்கு 10 ஆண்டுகள் தண்டனை வழங்கப்பட்டது. சுதேசிக் கப்பல் கம்பெனியை நிறுவி ஆங்கிலேய வணிக சூழ்ச்சியையே ஆட்டம் காணவைத்ததால் ‘கப்பலோட்டிய தமிழன்’ என்றும், சிறைக்குள் செக்கிழுக்க வைக்கப்பட்டதால் ‘செக்கிழுத்த செம்மல்’ என்றும் வரலாற்றில் வழங்கப்பட்டு வருகிறார் வ.உ.சி.

–ஸ்டாலின் குணசேகரன்

தினமணி
இந்தியா@75
ஆகஸ்ட்
1947 - 2021

## தமிழகத்தின்
# தியாக தீபங்கள்

## 3 சுப்பிரமணிய சிவா

தமிழகத்தில் வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா, சி.சுப்பிரமணிய பாரதி ஆகிய மூவரையும் 'மும்மூர்த்திகள்' என வரலாற்றாளர்கள் வர்ணிக்கின்றனர்.



1. வத்தலகுண்டில் 4-10-1884-இல் ராஜம் ஐயர் – நாகம்மை தம்பதிக்குப் பிறந்தார் சுப்பிரமணிய சிவா. குடும்பச் சூழல், வறுமை காரணமாக சிவாவின் பள்ளிப் படிப்புக் காலத்திலேயே பெற்றோர் திருவனந்தபுரத்தில் குடும்பத்துடன் குடியேறினர்.

2. 1905-இல் வங்கப் பிரிவினை இந்தியாவில் சுதேசியக் கனலை மூட்டியது. விவேகானந்தரின் தாக்கம், தேசியப் பிரச்னைகளில் நாட்டம் ஆகியவை சிவாவைச் செயல்படத் தூண்டின.

3. 1906-ஆம் ஆண்டு அங்குள்ள இளைஞர்களை ஒன்றுதிரட்டி 'தர்ம பரிபாலன சமாஜம்' எனும் அமைப்பை நிறுவினார். திருவாங்கூர் சமஸ்தான அதிபதிகள் சிவாவை திருவனந்தபுரத்தை விட்டு வெளியேற்றினர்.

4. இளம் வயதிலேயே திருமணமாகியிருந்த சிவா, மனைவியை வீட்டிலேயே விட்டுவிட்டு நடைப்பயணமாகவே ஊர்ஊராகப் போய் பிரசாரப் பிரளயத்தில் தன்னை மூழ்கடித்துக்கொண்டார். தேசாவேசம் மிக்க ஒரு பெரும் எழுச்சிமிகு இளைஞர் பட்டாளத்தையே தனது பேச்சாலும் எழுத்தாலும் உருவாக்கும் ஆளுமை சிவாவுக்கு அமைந்திருந்தது.

5. இத்தகைய எழுச்சிப் பயணத்தின் ஒரு பகுதியாகத்தான் தூத்துக்குடிக்கு வந்தார் சிவா. அங்கு வ.உ.சி.யைச் சந்தித்தார். வ.உ.சி.யின் வேண்டுகோளுக்கிணங்க அவரின் இல்லத்திலேயே தங்கி பணியாற்றினார். சுதேசிக் கப்பல் கம்பெனியை நிறுவியதுடன், 'கோரல் மில்' தொழிலாளர்களின் உரிமைப் போராட்டத்தையும் வழிநடத்திய வ.உ.சி.க்கு வலதுகரமாக மட்டுமல்ல, அனைத்துமாக விளங்கினார் சிவா. இருவரின் சொற்பொழிவுகளும் தூத்துக்குடி, திருநெல்வேலி, பாளையங்கோட்டை பகுதிகளில் தேசபக்தப் பெருநெருப்பு

6. பற்றிப் படர்வதற்குக் காரணங்களாயின.

நீதிபதி பின்ஹே, வ.உ.சி.க்கு ராஜதுரோகக் குற்றத்துக்காக ஓர் ஆயுள் தண்டனையும், சிவாவுக்கு அடைக்கலம் கொடுத்ததற்காக ஓர் ஆயுள் தண்டனையும் என தீர்ப்பில் தனித்தனியாகக் குறிப்பிட்டு வழங்கியதிலிருந்தே சிவாவின் அதிமுக்கியத்துவம் வெளிப்படுகிறது. சுப்பிரமணிய சிவாவுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

7. சுப்பிரமணிய சிவா 6 ஆண்டுகள் சிறைவாசத்துக்குப் பின் விடுவிக்கப்பட்டார். சிறைக்குள் கம்பளி ரோமம் நறுக்குதல், நீரில் கம்பளியை ஊறவைத்து உலர்த்துதல் போன்ற பணிகளைச் செய்யுமாறு வற்புறுத்தப்பட்டார். இதனால் வெளியில் வருகிறபோது தொழு

8. நோயோடு வந்தார். 1921-இல் அரசு நிந்தனைச் சொற்பொழிவுக்காக இரண்டாம் முறையாக இரண்டரை ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டார். ஞானபானு, பிரபஞ்சமித்திரன், இந்திய தேசாந்திரி ஆகிய இதழ்களைத் தனித்துவத்துடன் நடத்திய சுப்பிரமணிய சிவா 30 நூல்களை எழுதியுள்ளார்.

9. 'பாரதாஸ்ரமம்' என்ற அமைப்பைத் தொடங்கி தேசபக்தப் பணிகளை ஓய்வொழிச்சலில்லாது இறுதிவரை செய்துவந்த சுப்பிரமணிய சிவா, பாரதமாதா ஆலயத்தைப் பாப்பாரப்பட்டியில்

10. அமைக்க தேசபந்து சி.ஆர்.தாஸைக் கொண்டு அடிக்கல் நாட்டினார். அப்பணி முழுமை பெறுவதற்கு முன்னரே 1925-இல் காலமானார். அப்போது அவருக்கு வயது 41.

–த. ஸ்டாலின் குணசேகரன்

தினமணி

ஆகஸ்ட் 1947 - 2021


# இந்தியா@75

## தமிழகத்தின்

# தியாக தீபங்கள்

## 4 சி.சுப்பிரமணிய பாரதியார்

'ஆரம்ப காலத்தில் இலக்கியவாதியாகக் காட்சியளித்த பாரதி 1906-ஆம் ஆண்டிலிருந்து முழுநேர அரசியல்வாதியானார்' என்று பாரதி ஆய்வாளர் சீனி.விசுவநாதன் குறிப்பிட்டுள்ளார்.



கோபாலகிருஷ்ண கோகலே தலைமையில் பனாரஸில் (காசி) 1905-ஆம் ஆண்டு நடைபெற்ற காங்கிரஸின் அகில இந்திய மாநாட்டில் ஜி.சுப்பிரமணிய ஐயருடன் பார்வையாளராகவும், சுதேசமித்திரன் நிருபராகவும் பங்கேற்றார் பாரதியார். தாதாபாய் நௌரோஜி தலைமையில் கல்கத்தாவில் 1906-இல் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிலும் டாக்டர் ராஷ் பிகாரி கோஷ் தலைமையில் 1907-இல் நடைபெற்ற சூரத் காங்கிரஸிலும் பிரதிநிதியாகப் பங்கேற்றார். சூரத் காங்கிரஸில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்களைத் தமிழகப் பிரதிநிதிகள் சார்பில் வலியுறுத்திப் பேசும்பொருட்டு வ.உ.சி., சக்கரை செட்டியார், பாரதி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

மூன்று அகில இந்திய காங்கிரஸ் மாநாடுகளில் பங்கேற்று தனது அரசியல் அனுபவத்தையும் ஆளுமையையும் செழுமைப்படுத்திக் கொண்ட பாரதி, கட்சிக்குள் திலகரின் அரசியல் நிலையைத் தீவிரமாக ஆதரித்தார். 'பாரத ஜனசபை' என்ற தலைப்பில் காங்கிரஸ் தொடங்கப்பட்ட 1885-இல் இருந்து 1894 வரை பல்வேறு நகரங்களில் கூடி நிறைவேற்றிய தீர்மானங்களையும் தலைவர்களின் உரைகளையும் தமிழில் மொழிபெயர்த்து நூலாக்கித் தந்துள்ளார் பாரதி. சூரத் மாநாட்டு அனுபவங்களை 'எங்கள் காங்கிரஸ் யாத்திரை' என்ற தனி நூலின் மூலம் துல்லியமாக விளக்கியுள்ளார் பாரதியார். இவரின் இன்னொரு முக்கிய அரசியல் வெளியீடு 'புதிய கட்சியின் கொள்கைகள்' என்பதாகும்.

சென்னையில் தம் முற்போக்குக் கருத்துகளுக்கு ஒத்திசைவாக விளங்கிய சில தேசபக்தர்களை ஒன்றிணைத்து 'சுதேசி பிரசாரிணி சபை' என்ற அமைப்பை நிறுவினார் பாரதியார். தேசியத் தலைவர் விபின் சந்திர பாலர் ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை பெற்றதை எதிர்த்து இச்சபை சார்பில் 28-9-1907-இல் பாரதியார் தலைமையில் கண்டன ஊர்வலம் நடைபெற்றது. முன்னதாக, 17-9-1907-இல் இதன் காரணமாகவே கண்டனப் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. இதில் பாரதியும், சுரேந்திரநாத் ஆரியாவும் உரை நிகழ்த்தியுள்ளனர்.

இளைஞர்களை, மாணவர்களைத் தீவிர அரசியலுக்கு வென்றெடுக்கும் களப்பணியை மிகுந்த ஈடுபாட்டுடன் மேற்கொண்டு வந்துள்ளார் பாரதி. மாலை வேளைகளில் கல்லூரி மாணவர்களைக் கடற்கரைக்கு அழைத்துச்சென்று அவர்களிடம் உரையாடி, அவர்களை அரசியல் களத்திற்கு வார்த்தெடுக்கும் தொடர் முயற்சிகளில் ஈடுபட்டு வந்துள்ளார்.

ஆங்கிலேய அதிகாரிகள் பாரதியின் அரசியல் முகத்தை சரியான கோணத்தில் புரிந்துகொண்டு அவரை இடைவிடாமல் ஒற்றர்கள் மூலம் கண்காணிக்கவும், அவருக்குக் கிடைக்கும் உதவிகள் யாவற்றையும் தடுத்து நிறுத்தி அவரை ஆதரவற்றவராக்கவும், அவருக்கு மனச்சிதைவை உண்டாக்கும் கண்ணுக்குத்தெரியாத சித்திரவதைகளைச் செய்யவும் தலைப்பட்டனர்.

ஆம்... தனது கவிதைகளால் தமிழுக்கு மகுடம் சூட்டிய பாரதி, அரசியல் அரும்பணிகளால் தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

-த. ஸ்டாலின் குணசேகரன்

தினமணி
ஆகஸ்ட் 1947 - 2021
இந்தியா@75

## தமிழகத்தின்
# தியாக தீபங்கள்

## 5 டி.எம்.மூக்கன் ஆசாரி

'ஆங்கிலம் கற்றவர்களின் அமைப்பாகவே ஆரம்ப காலத்தில் காங்கிரஸ் விளங்கியது என்று ஒரு பொதுக் கருத்து நிலவியது. முதல் இரு காங்கிரஸுகளைப் பொருத்தவரையில் இது உண்மையாக இருக்கலாம். ஆனால் 1887 சென்னை காங்கிரஸைப் பொருத்தவரையில் அவ்வாறு இல்லை' என்று வங்காள வரலாற்று ஆய்வாளர்களான பிமேன் பிஹாரி மஜூம்தார், பக்த பிரசாத் மஜூம்தார் ஆகியோர் பதிவு செய்துள்ளனர்.



இவ்வாறான குறிப்புக்கு மூன்றாவது காங்கிரஸில் கும்பகோணத்திலிருந்து மாநாட்டுப் பிரதிநிதியாக வந்திருந்த டி.எம்.மூக்கன் ஆசாரி என்ற கைவினைஞர் தமிழில் நிகழ்த்திய உரைதான் காரணமாக இருந்துள்ளது.

மூன்றாவது காங்கிரஸில் மொத்தம் 17 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் 7-ஆவது தீர்மானம் தொழிற்கல்வியைப் பற்றியது. இத்தீர்மானத்தின் மீதான விவாதத்தில்தான் மூக்கன் ஆசாரி உரையாற்றினார். எடுத்தியம்பிய மொழியினால் மட்டுமல்லாது, அவர் எடுத்துரைத்த வித்தியாசமான பொருளாழும் மிக்க கருத்துகளாலும் அவ்வுரை பெரும் பாராட்டைப் பெற்றது.

மூக்கன் ஆசாரி நிகழ்த்திய தமிழ் உரையின் மூலம் கிடைக்கவில்லை. ஆங்கிலேயரான காங்கிரஸின் தலைவர் எ.ஓ.ஹ்யூம், மூக்கன் ஆசாரியின் தமிழ் உரையை உரியவர்களைக் கொண்டு அப்போதே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வைத்திருந்துள்ளார்.

இந்த ஆங்கில மொழிபெயர்ப்போடு உரையாளரைப் பற்றி 'ஐரோப்பாவில் கல்வி எனக் கூறத்தக்க எந்தக் கல்வியையும் கைவினைஞர் பெற்றவரில்லை. இந்த நற்குடியாளர், தஞ்சாவூர் முனிசபல் சபையின் உறுப்பினர் என்ற வகையில் நாளும் ஓயாது உழைப்பவர். பொதுமக்களுக்குத் தொண்டு புரிவதில் கருத்தாய் இருப்பவர். தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் இருந்து கும்பகோணத்தில் கூடிய கைவினைஞர்கள் கூட்டத்தில் இவரும் மற்ற இருவரும் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்' என்ற குறிப்பும் இணைக்கப்பட்டுள்ளது.

'நமது நாடு இன்று நெருக்கடியான நிலையில் உள்ளது. வரி விதிப்பு உயர்ந்துவிட்டது. முறையான முன்னேற்றத்திற்கான மூலாதாரங்கள் பற்றாக்குறையாக உள்ளன. இந்த நாட்டின் செல்வம் தொடர்ந்தாற்போல வெளியேறிக்கொண்டிருக்கிறது' என்று உணர்ச்சிப்பொங்கப் பேசிய மூக்கன் ஆசாரி 'தொழிற்கல்வி நிலையங்கள் நாடெங்கும் நிறுவப்பட்டு நன்கு நடத்தப்பட வேண்டும். இந்தியர்களுக்குத் தேவைப்படும் இயந்திரப் பொருள்கள் இங்கேயே உற்பத்தி செய்யப்பட வேண்டும். இவ்வாறு உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்குப் பயிற்சி, செயல்முறைகளைப் பற்றிய படிப்பு முதலானவற்றிற்கு இங்கேயே ஏற்பாடு செய்ய வேண்டும்' என்று முழங்கினார்.

நீதிபதிகள், உத்தியோகஸ்தர்கள் என்று இந்தியர்கள் ஆயிரக்கணக்கானோர் உயர்பதவிகளை அலங்கரிப்பது நாட்டின் வளர்ச்சிக்கு எவ்வகையிலும் பலன் தராது என்றும், தொழில் துறையின் முன்னேற்றம்தான் நாட்டின் அனைத்து வகை வளர்ச்சிக்கும் அடிப்படையென்றும், இதனை நோக்கி அரசின் கவனத்தை ஈர்ப்பதுதான் அம்மாநாட்டின் முழுமுதல் நோக்கமாக இருக்க வேண்டுமென்றும் அழுத்தம் திருத்தமாகப் பேசினார் மூக்கன் ஆசாரி.

மூக்கன் ஆசாரியிடமிருந்து ஒலித்தது தமிழ்க் குரல் மட்டுமல்ல, தன்மானக் குரலுமாகும்.

–த. ஸ்டாலின் குணசேகரன்

தினமணி

ஆகஸ்ட் 1947 - 2021

# இந்தியா@75

## தமிழகத்தின் தியாக தீபங்கள்

### 6 சக்கரை செட்டியார்

1. சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் தத்துவப் பாடத்தில் பட்டம் பெற்று பின்னர் சட்டம் படித்து வழக்குரைஞரானவர் சக்கரை செட்டியார். இவர் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர். இவரிடமிருந்த அபரிமிதமான ஆங்கிலப் புலமையும் பேச்சாற்றலும் அரசியலில் ஆர்வம் கொள்ள வழிவகுத்தது.



2. தேசியத் தலைவர்களின் உரைகளும் உறவும் இவரைச் செயல்படத் தூண்டின. இரண்டாண்டு காலத்திலேயே வழக்குரைஞர் தொழிலைத் துறந்து விடுதலைப் போராட்டத்தில் முழுக் கவனம் செலுத்தினார். 1924 முதல் இருந்து 1948 வரை 24 ஆண்டுகள் சென்னை மாமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து பணியாற்றினார். இடையில் 1941–1942 ஆண்டுகளில் சென்னை மாநகராட்சியின் மேயராகவும் திகழ்ந்துள்ளார்.

3. அது நேதாஜி காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து உள்கட்சி i. நெருக்கடியால் விலகிய காலகட்டம். சென்னை மாநகருக்கு 1939–ஆம் ஆண்டு வந்திருந்த நேதாஜி சுபாஷ் சந்திர போஸுக்கு மாநகராட்சி சார்பில் அதிகாரபூர்வ வரவேற்பும் பாராட்டும் அளிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை மாநகராட்சிக் கூட்டத்தில் முன்மொழிந்தார் சக்கரை செட்டியார்.

ii. உள்கட்சி அரசியல் சூழலின் காரணமாக காங்கிரஸ் கட்சி கவுன்சிலர்கள்கூட செட்டியாரின் முன்மொழிவை ஏற்கவில்லை. பிற கவுன்சிலர்களும் வெவ்வேறு காரணங்களைக் குறிப்பிட்டு அத்தீர்மானத்தை எதிர்த்தனர். அனைத்து கவுன்சிலர்களும் உள்ளடங்கிய மாநகராட்சிக் கூட்டத்தில் நேதாஜியின் தியாகத்தையும், சேவையையும் தனது ஆற்றல்மிக்க உரையின் மூலம் உணரவைத்து தான் முன்மொழிந்த தீர்மானத்தை ஏகமனதாக ஏற்க வைத்தார். மாநகராட்சியின் சார்பில் எழுச்சிமிக்க வரவேற்பு அளிக்கப்பட்டது.

4. 1907–இல் தமிழ் மாகாணத்திலிருந்து சூரத் காங்கிரஸுக்கு பிரதிநிதியாகச் சென்றவர்களில் சக்கரை செட்டியாரும் ஒருவர். வ.உ.சி., பாரதி ஆகியோரின் அணுக்கத் தோழராக விளங்கிய சக்கரை செட்டியார், அவர்களைப்போலவே திலகரின் தீவிர ஆதரவாளராகவும் திகழ்ந்தார்.

5. சென்னையில் பல்லாயிரம் தொழிலாளர்களை உள்ளடக்கிய பல தொழிற்சங்கங்களுக்குத் தலைவராக விளங்கிய சக்கரை செட்டியார், தொழிலாளர்களிடையே விடுதலை வேட்கையை வேரூன்றச்செய்யும் வேள்வியில் இடையறாது தம்மை ஈடுபடுத்திக்கொண்டார்.

6. தமிழ்நாடு தொழிற்சங்க காங்கிரஸ் சார்பில் நடத்தப்பட்ட செட்டியாரின் 76–ஆவது பிறந்த நாள் விழாவில் பங்கேற்ற ராஜாஜி, 'சக்கரை செட்டியார் தொழிலாளர்களின் தலைவர் மட்டுமல்ல, தேசிய இயக்கத்தின் தலைவருமாவார். தேசிய இயக்கத்திலும் அவர் தீவிர i வாதி. காங்கிரஸ்காரர்கள் 1929–ஆம் ஆண்டில்தான் ஜவாஹர்லால் நேருவின் தலைமையில் இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் கேட்டார் ii கள். சக்கரை செட்டியாரோ 1906–ஆம் ஆண்டிலேயே பூரண சுதந்திரம் வேண்டுமென்று கேட்டார். அத்தகைய தேசபக்தரைப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்' என்று பேசியுள்ளார்.

7. i பாரதியின் உற்ற நண்பரான செட்டியார், பாரதியின் உடல் தகனம் செய்யப்பட்ட இடத்தில் இரங்கல் உரையாற்றிய நால்வரில் ஒருவர். பாரதியின் மறைவுக்குப் பிறகு அவரது மனைவி செல்லம்மா பாரதி ii 'ஸ்வதேச கீதங்கள்' என்ற தலைப்பில் பாரதியின் கவிதைகள் அடங்கிய தொகுப்பு நூலொன்றைப் பதிப்பித்தபோது அவர் சக்கரை செட்டியாரிடம்தான் முன்னுரை பெற்றுள்ளார்.

8. ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத் தொழிலாளர்களைத் தட்டியெழுப்பிக் களமிறங்க வைத்ததில் சக்கரை செட்டியாருக்குத் தனித்த இடமுண்டு.

–த. ஸ்டாலின் குணசேகரன்

தினமணி
இந்தியா@75
ஆகஸ்ட்
1947 - 2021

# தமிழகத்தின் தியாக தீபங்கள்

## 7 பி.வரதராஜுலு நாயுடு

காற்றையும், தண்ணீரையும் போல அன்றைக்கு தமிழ்நாட்டிற்குத் தேவையாயிருந்தவை நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும். தமிழ்நாட்டுக்கு இவ்விரண்டு நன்மைகளையும் செய்தார் வரதராஜுலு ' என தமிழ் இதழியலில் ஆழத் தடம் பதித்த 'தினமணி' முன்னாள் ஆசிரியர் டி.எஸ்.சொக்கலிங்கம் பதிவு செய்துள்ளார்.



1906–ஆம் ஆண்டில் தனது 19–ஆவது வயதில் தேசிய இயக்கத்தில் அடியெடுத்து வைத்தார் நாயுடு. 1908–ஆம் ஆண்டு புதுச்சேரிக்குச் சென்று பாரதியாரைச் சந்தித்து வாழ்த்துப்பெற்று வந்துள்ளார். 1916–ஆம் ஆண்டு 'பிரபஞ்சமித்திரன்' இதழை விலைக்கு வாங்கி திருப்பூரிலிருந்தவாறு நடத்திவந்தார் சித்த மருத்துவரான வரதராஜுலு நாயுடு.

விடுதலைப் போராட்டத்தில் தொழிலாளர்கள் முழுவீச்சுடன் ஈடுபட்டால் வீரியத்துடனான விளைவுகள் கிடைக்கும் என்ற கருத்துள்ள நாயுடுவுக்கு 1918–ஆம் ஆண்டு மதுரை ஹார்வி மில்லில் நடைபெற்ற வேலைநிறுத்தம் ஒரு களமாக வாய்த்தது. அவ் வேலை நிறுத்தம் மாநில அளவில் கவனம் பெற்றது.

இதன் காரணமாக மதுரையைச் சுற்றி பத்து மைல் சுற்றளவுக்கு பொதுக்கூட்டம் போட்டுப் பேச ஆங்கிலேய அரசு தடைவிதித்திருந்தது. இதுபோன்ற அரசின் அடக்குமுறைக் காரணங்களினால் போராட்டக்காரர்களும், ஆதரவளித்தோரும் செயலிழந்துவிட்டனர். அத்தகைய சூழலில் நாயுடு அங்கு விரைந்ததோடு பொதுக்கூட்டங்களை ஏற்பாடு செய்து அரசின் அடக்குமுறைகளை எதிர்த்து கனல்கக்கும் எழுச்சியுரைகளை நிகழ்த்தினார்.

நாயுடு மீது வழக்குத் தொடரப்பட்டது. அரசின் நடவடிக்கைகள் மாநில அளவில் கொந்தளிப்பை ஏற்படுத்தின. வரதராஜுலு நாயுடுவுக்காக ஆஜராகி வழக்கை நடத்தினார் சேலத்தில் வழக்குரைஞராக இருந்த ராஜாஜி. நீதிமன்ற வளாகமே போர்க்களப் பகுதி போல் காட்சியளித்தது. வளாகத்தில் பீரங்கி நிறுத்திவைக்கப்பட்டது. ராணுவம் வரவழைக்கப்பட்டது. அந்த அளவிற்கு சட்டம் – ஒழுங்கு பிரச்னை உருவாயிற்று.

இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக நாயுடுவின் பேச்சும், பிரபஞ்சமித்திரனில் வெளியான அவரது எழுத்துகளும், ஆங்கிலேயரின் அடக்குமுறை முயற்சிகளுமே காரணங்களாயின. நாயுடுவுக்கு 18 மாத காலம் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. பிரபஞ்சமித்திரன் 1,000 ரூபாய் ஜாமீன் தொகை கட்ட வேண்டுமென்று தீர்ப்பாயிற்று. இதழ் நின்று போயிற்று. மேல்முறையீட்டில் நாயுடு விடுதலை பெற்றார்.

1919–இல் 'தமிழ்நாடு' இதழைத் தொடங்கினார். அது தமிழில் பிரபல நாளிதழ் ஆயிற்று. அதில் நாயுடு எழுதிய ' சுதந்திரப் போராட்டம்', 'இந்தியா விடுதலைபெற ஆயுதம் ஏந்த வேண்டும்' என்ற இரண்டு கட்டுரைகள் அவருக்கு 9 மாத சிறைத் தண்டனையைப் பெற்றுத் தந்தன. 'தமிழ்நாடு இதழ் ' 10,000 படிகள் வரை விற்பனையாயிற்று.

1920–இல் காந்தியடிகள் திருப்பூர் வந்தபோதும், 1921–இல் சேலம் வந்தபோதும் நாயுடுவின் இல்லத்தில்தான் தங்கினார். அப்போது நாயுடுவின் மனைவி தனது தங்க நகைகள் அனைத்தையும் சுயராஜ்ய நிதிக்காக காந்தியடிகளிடம் வழங்கினார்.

விடுதலைப் போர்க்களத்தில் நா, பேனா இரண்டையும் ஆயுதங்களாக்கியவர் பி.வரதராஜுலு நாயுடு.

–த.ஸ்டாலின் குணசேகரன்.

# தமிழகத்தின் தியாக தீபங்கள்

## 8 'ஜெய்ஹிந்த்' செண்பகராமன்

திருவனந்தபுரத்தில் வசித்துவந்த சி.சின்னசாமி பிள்ளை—நாகம்மாள் தம்பதிக்கு 1891—ஆம் ஆண்டு செப்டம்பர் 15—ஆம் தேதி பிறந்தார் செண்பகராமன்.



பள்ளி மாணவனாக இருந்தபோதே 'ஸ்ரீ பாரத மாதா வாலிபர் சங்கம்' என்ற அமைப்பை உருவாக்கினார் செண்பகராமன். 'ஜெய்ஹிந்த்' என்ற முழக்கத்தை வாய்ப்புக் கிடைக்கிறபோதெல்லாம் தான் முழங்கியதோடு சக மாணவர்களையும் முழங்க வைத்தார்.

திருவனந்தபுரத்தில் இருந்த ஜெர்மன் நாட்டு உளவாளியும் தாவர—உயிரியல் ஆய்வாளருமான சர் வால்டர் வில்லியம் ஸ்டிரிக்லாண்ட் என்பவருக்கு செண்பகராமனின் தேசபக்தியையும் தனித்திறன்களையும் உணரும் சூழல் ஏற்பட்டது. செண்பகராமனையும் அவரின் இணைபிரியா நண்பர் பத்மநாபனையும் ஜெர்மனிக்கு கப்பல் மூலம் அழைத்துச் சென்றார் ஸ்டிரிக்லாண்ட். அப்போது செண்பகராமனுக்கு 17 வயது.

ஜெர்மனியின் தலைநகரான பெர்லின் நகரிலுள்ள பல்கலைக்கழகத்தில் பொறியியல் ஆய்வுப் படிப்புவரை படிக்கவைத்து 'டாக்டர்' பட்டமும் பெறவைத்தார் ஸ்டிரிக்லாண்ட்.

இந்தியாவில் நடைபெற்றுவந்த விடுதலைப் போராட்டம் பற்றி ஜெர்மன் மக்களிடையே தொடர்ந்து சொற்பொழிவாற்றினார். இந்தியப் புரட்சிக்கு அமெரிக்காவிலிருந்து களம் அமைத்து பின்னர் ஜெர்மனி வந்துவிட்ட புரட்சியாளர் ஹர்தயாளுடன் செண்பகராமனுக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவர் மூலம் ஜெர்மனியின் மாமன்னர் கெய்சரின் மிகுந்த நட்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானார்.

ஜெர்மன் ராணுவத்தில் சிப்பாயாகச் சேர்ந்து தளபதியானார் செண்பகராமன். இந்தியர் ஒருவர் ஜெர்மன் ராணுவப் பிரிவொன்றிற்குத் தளபதியானது அதுவே முதல்முறை. கப்பற்படையிலும் சேர்ந்தார். அச்சமயத்தில் முதலாம் உலகப் போர் மூண்டது.

'எம்டன்' நீர்மூழ்கிக் கப்பலில் கப்பற்படைத் தளபதியுடன் வந்து சென்னையில் வெள்ளையரின் செயின்ட் ஜார்ஜ் கோட்டை மீது குண்டுபொழிய வைத்தார் செண்பகராமன்.

இந்தியாவுக்கு விடுதலை கிடைக்க உலக மக்களின் ஆதரவைப் பெறும் நோக்கில் 'சர்வதேச இந்திய ஆதரவுக் குழு' என்ற அமைப்பைத் தொடங்கினார். 'புரோ இந்தியா' என்ற இதழை ஆங்கிலம்—ஜெர்மன் ஆகிய இருமொழிகளில் நடத்தினார். உலக அளவிலான இந்தியப் புரட்சியாளர்கள் பலருடன் நெருங்கிய தொடர்பிலிருந்தார்.

மேடம் பிகாஜி காமாவின் தோழமை செண்பகராமனின் விடுதலையுணர்ச்சியைக் கூர்மைப்படுத்தியது. 'இந்திய தேசியத் தொண்டர் படையை' அமைத்தார் செண்பகராமன். வியன்னாவில் நேதாஜியைச் சந்தித்தார். எவரைச் சந்தித்தபோதும், கூட்டங்களிலும் 'ஜெய்ஹிந்த்' என்ற முழக்கத்தை உச்சரிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் செண்பகராமன்.

பின்னர் ஒரு கட்டத்தில் 'இந்திய தேசிய ராணுவம்' உருவாக செண்பகராமனின் தொடர்ந்த அயலக முயற்சிகள் அடித்தளமாயின.

1934—இல் தனது 43—ஆவது வயதில் காலமானார் செண்பகராமன். அவரது விருப்பப்படி அவரது அஸ்தி சில பல காரணங்களால் 32 ஆண்டுகள் கழித்து இந்திய மண்ணில் திருவனந்தபுரத்திலுள்ள கரமனை ஆற்றில் கரைக்கப்பட்டது.

த. ஸ்டாலின் குணசேகரன்

தினமணி
இந்தியா@75
ஆகஸ்ட் 1947 - 2021

# தமிழகத்தின் தியாக தீபங்கள்

## 9 சேலம் சி.விஜயராகவாச்சாரியார்

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அருகிலுள்ள பொன் விளைந்த களத்தூரைச் சொந்த ஊராகக் கொண்ட சி. விஜயராகவாச்சாரியார், சென்னை மாநிலக் கல்லூரியில் பட்டம் பெற்ற பின்னர் சேலம் நகரவைக் கல்லூரியில் பணியாற்றினார். பின்னர் சட்டம் படித்து வழக்கறிஞரான இவர் சேலத்தையே வசிப்பிடமாக்கிக் கொண்டார்.



பொதுப் பணிகளில் மிகவும் நாட்டம் கொண்ட விஜயராகவாச்சாரியார் 1895–ஆம் ஆண்டில் சென்னை மாநிலக் கவுன்சில் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார். வெள்ளையர் இயற்றிய பழைய சட்டங்களில் பல மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு ஆச்சாரியார் அன்றைய மாநிலக் கவுன்சில் மூலம் பெரும் பங்காற்றியுள்ளார்.

1913–ஆம் ஆண்டில் இவர் தில்லி மத்திய சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார். மதன்மோகன் மாளவியா, சுரேந்திரநாத் பானர்ஜி, கோகலே, முகமதுஅலி ஜின்னா போன்ற தேசத் தலைவர்களுடன் இணைந்து செயல்படும் வாய்ப்பினைப் பெற்றார்.

தீவிரவாதிகள் சிலர் கவர்னர் ஜெனரல் ஹார்டிஞ்ச் பிரபுவைக் கொல்ல முயன்றதைக் காரணங்காட்டி இந்தியக் குற்றவியல் சட்டத்தில் பல அடிப்படை மாற்றங்களைக் கொண்டுவர ஆட்சியாளர்கள் முயன்றனர். தேச விடுதலைக்குக் குரல் கொடுப்பவர்களை அரசுக்கு எதிராகச் சதி செய்தவர்களென குற்றம்சாட்டி அவர்களுக்குக் கடும் தண்டனை பெற்றுத்தரவே குற்றவியல் சட்டத்தில் மாற்றத்தைக் கொண்டுவர தீவிரமாக முயன்றனர். அரசின் சூழ்ச்சியை இனம் கண்ட ஆச்சாரியார் அச்சட்டத் திருத்தத்தை சட்டப்பேரவையிலேயே வன்மையாக எதிர்த்தார்.

1885–ஆம் ஆண்டு பம்பாயில் காங்கிரஸின் முதல் மாநாடு நடந்தபோது அதன் முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்கியவர் விஜயராகவாச்சாரியார். காங்கிரஸ் தலைவர் ஏ.ஓ. ஹ்யூமுக்கும் ஆச்சாரியாருக்கும் நெருங்கிய நட்பு நிலவியது.

1887–ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கட்சியின் அமைப்பு விதிகளை உருவாக்கியவர்களுள் ஆச்சாரியார் முக்கியமானவர். 1899–இல் காங்கிரஸின் கொள்கை பரப்புக் குழுவில் ஆச்சாரியார் இடம்பெற்றிருந்தார்.

தென்னாப்பிரிக்க இந்தியர்களின் பிரச்னைகளை இந்தியாவின் கவர்னர் ஜெனரலிடம் எடுத்துரைக்கும்படி ஆச்சாரியாருக்கு காந்தியடிகள் கடிதம் எழுதியிருந்தார். 1916–இல் நடைபெற்ற லட்சுமணபுரி மாநாட்டிலும் 1919–இல் ஜாலியன்வாலா பாக் சம்பவத்திற்குப் பிறகு அமிர்தசரஸில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிலும் பங்கேற்றார்.

1920–இல் வரலாற்று முக்கியத்துவமுள்ள நாகபுரி காங்கிரஸ் மாநாட்டின் தலைவராக ஆச்சாரியார் தேர்வு செய்யப்பட்டார். இவ்வாறு காங்கிரஸின் தொடக்க காலத்திலிருந்தே அதன் அகில இந்தியத் தலைவர்களில் ஒருவராக விளங்கிய ஆச்சாரியார் 1944–ஆம் ஆண்டு மறைகிற வரை ஆங்கிலேய ஆட்சிக்கும் அவர்களின் அடக்குமுறைக் கொள்கைகளுக்கும் எதிராக இடைவிடாது இயங்கி வந்துள்ளார்.

**த.ஸ்டாலின் குணசேகரன்**

தினமணி
இந்தியா@75
ஆகஸ்ட் 1947 - 2021

# தமிழகத்தின் தியாக தீபங்கள்

## 10 காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா

காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா 16 வயதில் விடுதலைப் போர்க்களத்தில் குதித்தவர். இளம் பேச்சாளராக தமிழகம் முழுவதும் வலம் வந்தவர்.



வ.உ.சி., சிவா கைதையும் அதன் விளைவாக ஏற்பட்ட மக்கள் எழுச்சியையும் பற்றி 17-3-1908-இல் கரூரில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியுள்ளார். அவ்வுரை ராஜ நிந்தனைக்குரியதாக அவர் மீது வழக்குப் போடப்பட்டு கைது செய்யப்பட்டார். அவருக்கு 5 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது. மேல் முறையீட்டில் தண்டனைக் காலம் 3 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. அப்போது அவருக்கு வயது 20. கோவை மத்திய சிறையில் சர்மா அடைக்கப்பட்டபோது எந்த வ.உ.சி. கைதைக் கண்டித்து உரையாற்றினாரோ அந்த வ.உ.சி. அச்சிறையில்தான் இருந்துள்ளார்.

1917-இல் 'இந்தியப் பாதுகாப்புச் சட்டம்' என்ற அடக்குமுறைச் சட்டம் வந்தது. அச்சட்டத்தின் கீழ் முதல் நடவடிக்கை சர்மாவின் மீதுதான் எடுக்கப்பட்டது. அரசாங்கத்தின் முன் அனுமதியில்லாமல் பேசவோ, எழுதவோ கூடாது எனும் தடையுத்தரவு சர்மா மீது ஏவப்பட்டது.

1921-இல் ஒத்துழையாமை இயக்கப் போராட்டத்தில் பங்கேற்று இரண்டாவது சிறைவாசத்தை அனுபவித்தார். 'இராஜியப் போராட்டத்தில் இன்னும் எத்தனை தடவை சிறைவாசம் புக நேரினும், அதற்கு என் வாழ்க்கையை ஒப்புவிப்பேன்' என்று 1922-இல் வேலூர் சிறையில் எழுதப்பட்ட நூலொன்றில் சர்மா குறிப்பிட்டுள்ளார்.

சர்மாவின் அரசியல் எழுத்துப் பணி 1916-இல் தொடங்கியது. 'ஸ்வதர்மா' எனும் துண்டறிக்கையை 20-3-1916-இல் 5,000 படிகள் அச்சிட்டு மக்களிடம் விநியோகித்தார். நெப்போலியன், மாஜினி, இந்தியா இழந்த தனம், அசோக சக்ரவர்த்தி, கும்பமகா ராசா, இராஜரிக சாஸ்திரம், திலகர் ஜீவிய சரித்திரம் ஆகிய 7 நூல்களை சிறையிலிருந்தவாறே எழுதினார்.

மகாத்மா காந்தி, முகமது அலி-ஷவுக்கத் அலி, சித்தரஞ்சன் தாசர், லாலா லஜபதிராய், சிவாஜி மகாராஜா, ஸ்வராஜ்யம், உலக சிரேஷ்டர் யார்? டால்ஸ்டாய், மகாத்மா காந்தியின் ஆன்ம சக்தியும் சாந்தி நிலையும், மோதிலால் நேரு, இந்திய மாதர்களின் நிலைமை, இந்தியாவில் கல்வி, சரோஜினிதேவி, புத்தர் ஜாதகக் கதைகள் ஆகிய 14 நூல்களை வெளியில் போராட்டங்களில் பங்கேற்றுக் கொண்டிருந்த காலகட்டங்களில் எழுதியுள்ளார். மொத்தம் 21 நூல்களைப் படைத்துள்ளார். அவற்றுள் 'புத்தர் ஜாதகக் கதைகள்' என்ற ஒரு நூலைத் தவிர அத்தனையும் அரசியல் நூல்கள்.

தமிழ் மக்களிடையே நாட்டுப்பற்றை வளர்க்கவே தாம் நூல்கள் எழுதியதாக அவரே பதிவு செய்துள்ளார். இந்நூல்கள் அனைத்தையும் சொந்த செலவிலேயே வெளியிட்டுள்ளார். 1923-இல் வெளியான 'இந்தியா இழந்த தனம்' என்ற சர்மாவின் நூல்தான் ஆங்கிலேயரின் பொருளாதாரச் சுரண்டலைப் பற்றி வெளியான முதல் தமிழ் நூல். 1925-இல் தனது 38-ஆவது வயதில் சர்மா மறைந்தார்.

த.ஸ்டாலின் குணசேகரன்

# தமிழகத்தின் தியாக தீபங்கள்

## 11 காஜீலு லட்சுமிநரசு செட்டியார்

காங்கிரஸ் கட்சி தோன்றுவதற்கு 79 ஆண்டுகளுக்கு முன்பும், காந்தியடிகள் பிறப்பதற்கு 63 ஆண்டுகளுக்கு முன்பும் பிறந்தவர் காஜீலு லட்சுமிநரசு செட்டியார். 1806-இல் சென்னையில் பிறந்தார்.



லட்சுமிநரசுவின் தந்தை செல்வச் செழிப்புமிக்க பெரும் வணிகர். பள்ளிப் படிப்பை முடித்தவுடன் தொழிலை கவனிக்கும் பொறுப்பேற்க வேண்டியதாயிற்று. 'சென்னை சுதேசிய சபை' என்ற அமைப்பை நிறுவினார். மக்களின் குறைகளையும் உள்ளக்குமுறலையும் ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுக்காக இங்கிலாந்திலிருந்த மேலிடத்துக்கு விண்ணப்பங்கள் அனுப்பினார்.

அக்காலத்தில் வெளிநாட்டிலிருந்து வந்த பாதிரியார்கள் பலர் கல்வியைப் பரப்புவதாகக் கூறிக்கொண்டாலும், தம் மதத்தையும் மறைமுகமாகப் பரப்பும் பணியைச் செய்தனர். இதற்கு கிழக்கிந்திய கம்பெனியினர் பின்புலமாக இருந்தனர். கம்பெனியின் வஞ்சகப் போக்குகளுக்கு எதிராக லட்சுமிநரசு களம் இறங்கினார்.

'கிரெஸெண்ட்' என்ற இதழை 1844-இல் தொடங்கி ஆங்கிலேய அதிகாரிகளின் இச்செயலுக்கு எதிராகக் கட்டுரைகள் எழுதினார். இச்சூழலில் மதமாற்றத்திற்குச் சாதகமான சட்டமொன்றை இயற்றியது கம்பெனி அரசு. கொந்தளித்த குடிமக்களைக் கொண்ட கூட்டமொன்றைக் கூட்டினார் லட்சுமிநரசுச் செட்டியார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட கண்டனத் தீர்மானத்தை இங்கிலாந்திலிருந்த மேலிடத்துக்கு அனுப்பிவைத்தார். சூழலைப் புரிந்து கொண்டு அச்சட்டத்தில் மக்கள் கோரிய திருத்தத்தைச் செய்தது கம்பெனி ஆட்சி.

1852-இல் தமிழகம் வந்திருந்த டான்பி சைமூர் என்ற இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர் சென்னையில் லட்சுமிநரசுவைச் சந்தித்தார். சைமூரை அழைத்துச் சென்று தமிழகத்தின் பல பகுதிகளில் மக்கள் படும் அவதிகளை நேரில் காண்பித்தார் நரசு.

விவசாயிகள் தாங்க முடியாத வரிச் சுமையால் துடிப்பதையும், அவ்வாறு வரி செலுத்த முடியாதவர்களை தாசில்தார் அலுவலகம் முன்பு கொதிக்கும் வெயிலில் காலின் கட்டை விரல்களைப் பிடித்துக்கொண்டு வில்போல் வளைந்து நீண்டநேரம் நின்றுகொண்டே முழங்காலில் தலையை முட்டவைக்கும் கொடூரக் காட்சியையும் நேரில் காட்டினார். வரி செலுத்தாத வறியவர்களைப் பெரிய கற்களை தலையில் சுமந்து கொண்டு நிற்கவைத்த காட்சிகளையும் பார்த்தார் சைமூர்.

1854-ஆம் ஆண்டு நடைபெற்ற இங்கிலாந்து நாடாளுமன்றக் கூட்டத்தில் அத்தனையையும் எடுத்துரைத்தார் சைமூர். இத்தகைய கோரிக்கைகளுக்காக மக்களிடையே மீண்டும் கையெழுத்து இயக்கம் நடத்தி 14,000 கையெழுத்துகளடங்கிய விண்ணப்பமொன்றை இங்கிலாந்து அரசுக்கு அனுப்பினார் லட்சுமிநரசு.

1857-இல் நடைபெற்ற சிப்பாய்ப் புரட்சியும் லட்சுமிநரசு போன்றவர்கள் எடுத்த தொடர் நடவடிக்கைகளும்தான் கிழக்கிந்திய கம்பெனியின் அதிகாரத்தை ரத்து செய்துவிட்டு இங்கிலாந்து அரசு நேரடியாக இந்திய ஆட்சியை எடுத்துக்கொள்வதற்குக் காரணங்களாக விளங்கின.

மிகப்பெரும் செல்வந்தரான லட்சுமிநரசு ஓய்வொழிச்சலில்லாமல் மக்கள் பணி செய்ததால் நாளடைவில் தொழிலையும் சொத்துகளையும் இழந்து தனது கடைசிக் காலங்களில் வறுமையில் வாடினார்.

**த.ஸ்டாலின் குணசேகரன்**

## தமிழகத்தின்
# தியாக தீபங்கள்

## 12 வ.வே.சு.ஐயர்

வ.வே.சு. ஐயர் திருச்சியிலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குரைஞராக ஐந்தாண்டுக் காலம் தொழில் புரிந்து வந்தார். பின்னர், ரங்கூன் சென்று ஆங்கிலேய பாரிஸ்டர் ஒருவரிடத்தில் இளநிலை வழக்குரைஞராகப் பணியாற்றினார். பாரிஸ்டர் பட்டம் பெற எண்ணிய ஐயர் 1907-இல் லண்டன் சென்றார்.



இந்தியாவிலிருந்து மேற்படிப்பிற்காக லண்டன் செல்லும் பல மாணவர்களைப்போலவே ஐயரும் அங்கிருந்த 'இந்தியா ஹவுஸ்' விடுதியில் தங்கினார். அங்குதான் அவர் வீர சாவர்க்கரைச் சந்தித்தார். சாவர்க்கர் தலைமையில் 'சுதந்திர இந்தியச் சங்கம்' என்ற ஓர் அமைப்பு இந்தியா ஹவுஸில் உருவாயிற்று. அதற்கு ஐயர் துணைத் தலைவரானார். 1857-இல் நடைபெற்ற சிப்பாய்ப் புரட்சியின் பொன்விழா ஆண்டையொட்டி சாவர்க்கர் '1857 முதலாவது சுதந்திரப் போர்' என்ற நூலை மராத்திய மொழியில் எழுதினார். ஐயரின் மேற்பார்வையில் அந்நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

வங்கப் பிரிவினை எதிர்ப்பு நாள் லண்டனில் 11-10-1908-இல் நடைபெற்றது. லாலா லஜபதி ராய், விபின் சந்திர பால், காபர்தே முதலியோர் பேசினர். அதே நாளில் மேடம் காமா இந்தியா ஹவுஸில் உரை நிகழ்த்தினார். இந்நிகழ்வுகளிலெல்லாம் ஐயரின் பங்களிப்பு வலுவாக இருந்தது. மதன்லால் திங்க்ரா எனும் இந்திய இளைஞன் 1-7-1909-இல் பிரிட்டிஷ் இந்திய விவகாரத் துணை அமைச்சரான கர்னல் சர் கர்சான் வில்லியை லண்டனில் சுட்டுக் கொன்றார். கெடுபிடி அதிகமாயிற்று.

ஐயர் பார்-அட்-லா தேர்வில் வெற்றி பெற்றார். ஆங்கிலேய மன்னருக்கு விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டால் பாரிஸ்டர் பட்டம் கிடைத்துவிடும் நிலையில் மன்னருக்கு விசுவாசம் தெரிவிக்க மறுத்து பாரிஸ்டர் பட்டத்தைத் துறந்தார். அப்போது அவருக்கு வயது 29.

லண்டனிலிருந்து இந்திய விடுதலைக்குத் தொண்டாற்ற இயலாத சூழலில் ஐயர் பல நாடுகளின் வழியாக பல வேடங்களில் ரகசியப் பயணம் செய்து 1910-ஆம் ஆண்டு புதுச்சேரி வந்து சேர்ந்தார். லண்டனில் காந்தியடிகளை சாவர்க்கருடன் சந்தித்து நான்கைந்து நாள்கள் உரையாடும் வாய்ப்பைப் பெற்றிருந்தார் ஐயர். காந்தியடிகள் 1915-ஆம் ஆண்டு புதுச்சேரி வந்திருந்தபோதும் அவரைச் சந்தித்துப் பேசினார்.

பாரதியின் 'இந்தியா' இதழில் எழுதிவந்தார் ஐயர். கலெக்டர் ஆஷை சுட்டுக் கொன்ற வாஞ்சிநாதனுக்கு ஆயுதப் பயிற்சியளித்தவரும் ஐயரே. 1920-இல் ஐயர் பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் நுழைந்தார். திரு.வி.க.விற்குப் பிறகு 'தேசபக்தன்' நாளிதழின் ஆசிரியரானார். தேசபக்தனில் வெளியான தலையங்கத்திற்காக சிறைத் தண்டனை பெற்றார். 1923-இல் காக்கிநாடா, 1924-இல் பெல்காம் ஆகிய காங்கிரஸ் மாநாடுகளில் பங்கேற்று உரையாற்றினார்.

ஐயருக்கு அரசியலும் இலக்கியமும் இரண்டு கண்களாக விளங்கின.

1925-ஆம் ஆண்டு ஜூன் மாதம் மூன்றாம் தேதி பாபநாசம் அருவியில் குளிக்கச் சென்ற ஐயர் தண்ணீரில் தவறி விழுந்து மூழ்கிய தன் மகளைக் காப்பாற்ற முயன்றபோது தானும் மூழ்கி மரணமடைந்தார்.

த.ஸ்டாலின் குணசேகரன்

தினமணி
இந்தியா@75
ஆகஸ்ட்
1947 - 2021

## தமிழகத்தின்
# தியாக தீபங்கள்

## 13 எம்.பி.டி.ஆச்சார்யா

1. எம்.பி.டி. ஆச்சார்யா 1906-இல் 'இந்தியா' இதழைத் தொடங்கினார். அதன் ஆசிரியர் பாரதியார். 'பால பாரத்' என்ற ஆங்கில வார இதழையும் ஆச்சார்யா தொடங்கினார். அதற்கும் பாரதியே ஆசிரியர்.



2. 'சட்ட ரீதியான வழிமுறைகள் மூலம் முழு விடுதலையடைய வேண்டுமென இந்தியா பத்திரிகை எழுதுகிறது. எனினும், அது காங்கிரஸ் வழிமுறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும்' என்று பிரகடனம் செய்தார் பாரதி.

3. 1907-ஆம் ஆண்டு சூரத் காங்கிரஸின் பிரதிநிதியாகப் பங்கேற்றார் ஆச்சார்யா. 4 1908 ஆகஸ்ட் 15-இல் 'இந்தியா' பத்திரிகை அலுவலகம் காவல் துறையால் தீவிரமாக சோதனையிடப்பட்டது. தொடர்ந்து நெருக்கடி அதிகரித்ததால் 10.10.1908 முதல் புதுச்சேரியிலிருந்து 'இந்தியா'வை நடத்தினார். இதன் பொருட்டே பாரதி புதுச்சேரி சென்றார்.

5. 1908-இல் லண்டன் சென்ற ஆச்சார்யா, ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா நடத்திவந்த இந்தியா ஹவுஸில் தங்கினார். இந்தியா ஹவுஸை மையமாகக் கொண்டு செயல்பட்டுவந்த ஆச்சார்யா பாரீஸில் இயங்கிவந்த 'பாரீஸ் இந்தியக் கழகம்', ஜெர்மனியின் 'பெர்லின் இந்திய தேசியக் குழு' போன்ற இந்திய விடுதலைப் புரட்சிக் குழுவினரை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

6. 1909-இல் பாரீஸ் சென்ற ஆச்சார்யா 'இந்திய சுதந்திரப் போர்' என்ற சாவர்க்கரின் நூல் 3,000 பிரதிகள், 'தல்வார்', 'வந்தே மாதரம்', 'இன்டியன் சோஷியாலஜிஸ்ட்' போன்ற ஆங்கில இதழ்களையும், துண்டுப் பிரசுரங்களையும் ரகசியமாக தமிழகத்துக்கு அனுப்பிவைத்தார்.

7. வெளிநாட்டிலிருந்து வந்தபோது பம்பாய் துறைமுகத்தில் கைதான செஞ்சேரி ராமராவ் என்பவரிடத்திலிருந்து துப்பாக்கிகளும் 500 தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டன. விசாரணையில் அவற்றை அனுப்பிவைத்தவர் ஆச்சார்யா என்று உறுதியாயிற்று.

8. லண்டன், பாரீஸ், பிரஸ்ஸல்ஸ், பெர்லின், ஜூரிச், வியன்னா, கான்ஸ்டாண்டிநோபிள், நியூயார்க், கலிபோர்னியா, ஸ்டாக்ஹோம், காபூல், தாஷ்கண்ட், மாஸ்கோ உள்ளிட்ட பல நகரங்களுக்கும் சுற்றிச் சுழன்று இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவும் உதவியும் திரட்டும் பணியில் இடைவிடாது ஈடுபட்டார்.

9. 1915-இல் மகேந்திர பிரதாப் தலைமையில் தற்காலிக இந்திய அரசை ஆப்கனில் அமைத்தனர். 10. 1917-இல் இந்திய தேசியப் புரட்சியாளர்கள் ஸ்டாக்ஹோமில் கூடி 'இந்தியப் புரட்சிக் குழு'வை நிறுவினர். இவற்றில் ஆச்சார்யாவின் பங்கே பிரதானமானது. புரட்சியாளர்களின் நடவடிக்கைகளை ரஷியாவிலிருந்து மேற்கொள்ள முடிவெடுத்தனர்.

11. மகேந்திர பிரதாப் தலைமையில் ஆச்சார்யா உள்ளிட்ட குழுவினர் ரஷிய தலைவர் லெனினைச் சந்தித்து இந்திய விடுதலை குறித்து உரையாடினர். 12. 1920 முதல் 1922 வரை ரஷியாவிலிருந்தே ஆச்சார்யா செயல்பட்டார். புரட்சியாளர் எம்.என். ராய், எம்.பி.டி. ஆச்சார்யா ஆகியோர் 13. முன்னின்று 1920-ஆம் ஆண்டு தாஷ்கண்ட் நகரில் இந்தியப் புரட்சியாளர்களைக் கொண்ட கம்யூனிஸ்ட் குழுவை உருவாக்கினர்.

26 ஆண்டுகள் வெளிநாடுகளில் வாழ்ந்தார் ஆச்சார்யா. 14 ஆண்டுகள் முழுமையாக இந்திய விடுதலைக்கான புரட்சிகர நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டார்.

– த. ஸ்டாலின் குணசேகரன்

தினமணி
இந்தியா@75
ஆகஸ்ட்
1947 - 2021

# தமிழகத்தின் தியாக தீபங்கள்

## 14 சேலம் ராமசாமி முதலியார்

சேலம் ராமசாமி முதலியார் மேதாவிலாசம் மிக்க தமிழக அரசியல் ஆளுமைகளில் முதல் வரிசையில் இருப்பவர். இவரது தாத்தா கிழக்கிந்திய கம்பெனியில் துபாஷியாய் (மொழிபெயர்ப்பாளர்) பதவி வகித்தவர். தந்தை சேலத்தில் செல்வமும் செல்வாக்கும்மிக்க நிலக்கிழாராகவும், தாசில்தாராகவும் விளங்கியவர்.



கல்வியின் பொருட்டு ஆறாம் வயதிலேயே சென்னைக்கு அனுப்பப்பட்ட ராமசாமி முதலியாருக்கு எல்லா நிலைகளிலும் மிக உயர்ந்த கல்வி அளிக்கப்பட்டு, பின்னாள்களில் புகழ்மிக்க வழக்குரைஞரானார். பின்னர் தனிச்சிறப்புமிக்க நீதிபதியாகவும் திகழ்ந்தார்.

இவர் கும்பகோணத்தில் முன்சீஃபாக இருந்தபோது தமிழறிஞர் உ.வே.சாமிநாத ஐயர் இவரைச் சந்தித்து உரையாடிய பின்னர், இவருடைய அறிவுறுத்தலால்தான் சங்கத் தமிழ் ஆய்வை மேற்கொண்டதாக ஐயர் சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார்.

ராமசாமி முதலியாரின் அறிவு, ஆற்றல், ஆளுமை அனைத்தையும் அழுத்தமாகவும், விளக்கமாகவும், நன்றியுணர்வுடனும் பதிவு செய்துள்ளார் உ.வே.சா. அரசியல் ஆர்வம் மிகுதியால் புகழ்மிக்க நீதிபதி பொறுப்பைத் துறந்துவிட்டு முழுப் பொதுவாழ்வுக்கு வந்தார் ராமசாமி முதலியார்.

அந்நாளில் 'சென்னை மகாஜன சங்கம்' மக்கள் பிரச்னைகளில் தலையிட்டு பெரும் கிளர்ச்சி செய்து வந்தது. அந்த அமைப்பின் முக்கிய நிர்வாகிகளில் ஒருவரான முதலியார் 1882-இல் சென்னை நிர்வாக சபையிலிருந்து ஓய்வுபெற்ற வெள்ளை அதிகாரிக்கு நினைவுச் சின்னம் எழுப்புவதை சென்னை மகாஜன சங்கம் மூலம் வலுவாக எதிர்த்தார்.

இத்தகைய ஒரு அரசு நிகழ்வுக்கு முதன்முதலில் எதிர்ப்புக் குரல் கொடுத்தவர் முதலியார்தான். ஆங்கிலேய ஆட்சியின் விளைவாக மக்கள்படும் துன்பம் முதலியாரை அரசியலில் அடுத்தடுத்த கட்டங்களுக்கு இட்டுச் சென்றது. அறிவார்ந்த அரசியலாளராகப் பரிணமித்தார்.

1885-இல் பிரிட்டனில் நடந்த பொதுத்தேர்தலின்போது இந்தியாவிலிருந்து ஆழ்ந்த தேசபக்தியும் சிறந்த நாவன்மையும் மிக்க மூன்று அரசியல் ஆளுமைகளைத் தேர்வுசெய்து லண்டனுக்கு அனுப்பி அதன் மூலம் இந்தியாவின் குரலை பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் எழுப்பக்கூடிய நல்லவர்கள் சிலரை வெற்றிபெற வைக்க வேண்டுமென இந்திய தேசியவாதிகள் முடிவெடுத்தனர். அப்பணிக்கு இந்திய அளவில் தேர்வு செய்யப்பட்ட மூன்று அரசியல் அறிஞர்களுள் ராமசாமி முதலியாரும் ஒருவர். இந்திய விடுதலைக் குரலை இங்கிலாந்தில் ஓங்கி ஒலித்த முதல் தமிழர் ராமசாமி முதலியார்.

முதலியாரின் விஷயமும் வீரியமும் மிக்க உரை பல ஆங்கிலேயர்களுக்கு இந்தியாவின் நியாயத்தை உணர்த்தியது.

1887-இல் சென்னையிலும் பின்னர் அலாகாபாதிலும் நடைபெற்ற காங்கிரஸின் அகில இந்திய மாநாடுகளில் முதலியார் பங்கேற்றார். சென்னை காங்கிரஸில் ஆங்கிலேய அரசு கொண்டுவந்த ஆயுதச் சட்டத்தை எதிர்த்து இவர் ஆற்றிய உரை தனித்துவம் மிக்கது. 1895 மார்ச் இரண்டாம் தேதி தனது 40-ஆவது வயதில் ராமசாமி முதலியார் மறைந்தார்.

– த.ஸ்டாலின் குணசேகரன்.

# தமிழகத்தின் தியாக தீபங்கள்

## 15 ஜி.ஏ.நடேசன்

பதிப்பாளர், இதழாளர், அரசியலாளர் என்ற முப்பரிமாணச் செயற்பாட்டாளராக விளங்கியவர் ஜி.ஏ.நடேசன்.



1873–இல் பிறந்த இவர் அக்காலத்திலேயே சென்னை மாநிலக் கல்லூரியில் பி.ஏ. படித்திருந்தபோதிலும் உத்தியோக முயற்சிகள் எதிலும் ஈடுபடாமல் அன்றிருந்த வழக்கப்படி சட்டக் கல்லூரியில் சேர்ந்து வழக்குரைஞராக முயற்சிக்காமல் பதிப்பாளராகவும் இதழாளராகவும் வருவதை லட்சியமாகக் கொண்டிருந்தார்.

அக்காலத்தில் தேசத் தொண்டும் பதிப்புத் தொழிலும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புள்ளது என்பதாலேயே பதிப்புத் துறையைத் தேர்வு செய்வதில் பேரார்வமும் பிடிவாதமும் காட்டினார்.

தென்னாப்பிரிக்காவில் இந்தியரின் உரிமைப் போராட்டம் தொடங்கிய காலம் முதல் காந்தியடிகளுடன் நெருங்கிய நட்புடன் இருந்தவர். தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த காலத்தில் சென்னையிலிருந்தவாறு அவருக்கு எல்லா வகையான உதவிகளையும் செய்து வந்துள்ளார்.

காந்தியடிகள் தொடக்கக் காலங்களில் சென்னை வந்தபோதெல்லாம் நடேசனின் இல்லத்தில்தான் தங்கியுள்ளார். 'காந்தியடிகளை தென்னிந்தியாவுக்கு அறிமுகம் செய்துவைத்தவர்களில் முதல்வர் நடேசன்' என்று 1949–இல் நடேசன் இறந்தபோது இதழ்கள் வெளியிட்ட இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகாகவி பாரதியார் தம்முடைய தேசியப் பாடல்கள் பதிப்பிக்கப்பட்டு வெளிவரவில்லையே என்ற ஆதங்கத்திலிருந்தபோது அவரை வி.கிருஷ்ணசாமி ஐயரிடம் அழைத்துச் சென்று 1907–இல் முதன்முதலில் பாரதியார் பாடல்கள் சிறு நூலாக வருவதற்கு முழுமுதற் காரணமாக விளங்கியவர் ஜி.ஏ. நடேசன். வி. கிருஷ்ணசாமி ஐயருக்கே கோகலேவை அறிமுகப்படுத்தியவரும் நடேசன்தான்.

காங்கிரஸ் தேசியத் தலைவர்கள் அனைவருடனும் அணுக்கத் தொடர்புடன் இருந்தவர் நடேசன். முதல் மாநாட்டுக்குத் தலைமையேற்ற டபிள்யு.சி.பானர்ஜி, நடேசன் 1898–இல் பதிப்பித்த 'இந்திய அரசியல்' என்ற அவரின் முதல் நூலுக்கு முன்னுரை எழுதியுள்ளார்.

மதுரையில் 1901–இல் நடைபெற்ற சென்னை மாகாண காங்கிரஸ் மாநாட்டில் உரையாற்றியுள்ளார் நடேசன். அப்போது அவருக்கு 27 வயது.

1905, 1906, 1907 உள்ளிட்ட அகில இந்திய காங்கிரஸ் மாநாடுகளில் பிரதிநிதியாகப் பங்கேற்றுள்ளார். 'ஜி.ஏ.நடேசன் அண்ட் கம்பெனி' என்ற பதிப்பகத்தைத் தொடங்கி 1,000க்கும் மேற்பட்ட ஆங்கில நூல்களைப் பதிப்பித்துள்ளார். அவற்றுள் பெரும்பான்மையானவை அரசியல் நூல்கள். 'மலிவுப் பதிப்பின் முன்னோடி' என்று கருதத்தக்க விதத்தில் மிகச்சிறந்த அரசியல் நூல்களை மலிவுப் பதிப்புகளாக வெளியிட்டு அதிக மக்களிடம் சென்றடைய வழிவகை செய்துள்ளார்.

ஜி.ஏ.நடேசனின் 'தி இந்தியன் ரிவ்யூ' என்ற ஆங்கில மாத இதழ் இந்திய அளவில் மிகவும் குறிப்பிடத்தக்க அரசியல் பங்களிப்பைச் செலுத்தியுள்ளது.

தமிழகத்தின் அகில இந்திய அரசியல் மற்றும் பதிப்புலக ஆளுமைகளுள் முதல் வரிசையில் இருப்பவர் ஜி.ஏ.நடேசன்.

–த.ஸ்டாலின் குணசேகரன்.

Tele: TNPSC CURRENT AFFAIRS (தமிழ்)